Regd. M. No. 4565

தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

மலர் 4 | செப்டம்பர்—டிசம்பர் 1944 | இதழ் 9-12.

ஆசிரியர் :

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர் :

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.
கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press,
No. 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hyde Park"
Poonamallee High Road, Kilpauk, Madras.

தி நியோ ரெமடீஸ் மானுபேக்சரிங் கம்பேனி

ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை ஸ்டேட்,

—:: தென் இந்தியா. ::—

NEO-GRIPE

நியோ-கிரைப் குழந்தைகள் வன்மையுடனும் நோய் அணுகாமலும் இருப்பதற்கு இது ஒரு முக்கிய ஔஷதமாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் குடல் சம்பந்தமான வயிற்று வலி, புளிப்பு வாந்தி, அசிரணம், வயறு உப்பிசம் போன்ற வியாதிகளுக்கு இது கை கண்ட மருந்தாம். குழந்தைகள் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்கவேண்டியது மிகவும் அவசியம். குழந்தைகளுக்கென பக்குவமான முறையில் உயர்தர மருந்துகளினால் செய்யப்பட்டது.

NEO-PHLOGESTINE

நியோ-பிளோஜிஸ்டின் இது நிமோனியா முதலிய சுவாசாசய ரோகங்கட்கும், கட்டி, பிளவை, சூலை முதலிய வீக்கங்கட்கும் மேல் பூச்சாக பூச விரைவில் குணம் அளிக்கும். பக்குவமான முறையில் உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

BABA'S-CURE

பாபாஸ்-க்யூர் இருமல், இளைப்பு, சுவாசகாசம் (Asthma) முதலிய ரோகங்களுக்கு இதை நெருப்பிலிட்டு புகை பிடிக்க தொந்திரவு நீங்கி, உடனே சுகம் காணலாம். இது கைதேர்ந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.

(இம்மருந்துகள் எல்லா மருந்துகடைகளிலும் கிடைக்கும்.)

இலிங்கம்

(ஜாதிலிங்கம்)

(64-ம் பக்கத் தொடர்ச்சி)

குன்ம அனற்புண்ணும் இலிங்கபற்ப ஆட்சியும்.

கொங்குநாட்டில் வாழ்கின்ற மலையாளிகளும் பைசாசம் போன்ற பிணி என்று வெறுக்கப்பட்ட குன்மவகைகளில் ஒன்றாகிய "குன்ம அனற்புண்" வயிற்று வலியையும், அதைப்பற்றித் தோன்றிய மந்தத்தையும், மந்தத்தைப்பற்றித் தோன்றிய களிரையும், அதுமுதலாகக் காணப்பட்ட வெப்பத்தையும், அதனால் பருக்கட்டித் தோன்றிப்பின் புண்ணிரணமாகி வாங்காமல் அரோசகத்தையும், விதனத்தையும் மேலிடச்செய்யும். இதற்கு "ஆறுப்புரவனப்புண்" என்றும் பெயர் உண்டு. மேலே கூறப்பட்ட வயிற்றுவலியுடனே புண்கள் உண்டாம் இடங்கள் ஆறாம். 1 முலைக்கண், 2 தோள், 3 மார்புபள்ளம், 4 தவடைப்பள்ளம், 5 வாய், 6 முழங்கால் மடிப்பு ஆகும். இவ்வாறில் வாதத்தைப்பற்றி வருவன முலைக்கண்ணும், தோளுமாகும். இந்த இரண்டில் முன்னது சாத்தியம், பின்னது அசாத்தியமாகும். பித்தத்தைப்பற்றி வருவன, மார்புபள்ளம் தவடைப் பள்ளமாகும். இந்த இரண்டில் முன்னது சாத்தியம், பின்னது அசாத்தியமாகும். கபத்தைப்பற்றி வருவன வாய் முழங்கால் மடிப்பாகும். இந்த இரண்டில் முன்னது சாத்தியம், பின்னது அசாத்தியமாகும் என்று கொள்க.

இப்பிணிக்கு, கொங்கு, மல்லிகை, அல்லி, பூசனி, புன்னை, கற்றாழை இவைகளின் மலர், தாதுச்சுண்ணம், தேன் இவைகள் இரண்டுபங்கு எடுத்து ஒருபங்கு இலிங்கபற்பம் சேர்த்து ஒன்பது நாள் மத்தித்துப் பிறகு ஒன்பது நாள் நிழலில் உலர்த்திக் களிப் பக்குவமாக்கிக் கொள்ளவும். இக்களியைத் தாமரை, குப்பைமேனி, சிந்தில், அறுகு, சர்க்கரை, இஞ்சி ஆகிய துணைமருந்துகளில் கூறப்பட்ட வாத முதலிய ஆறு நோய்களுக்கு முறையே கொடுக்க நீங்கும் என்ப. இதை,

"மலையாள மானதொரு கொங்குதேசத்திலுள
மனிதர் பெருவயிறு குன்ம
மாறாத புண்ணிரண மேகானலப் பிணிகள்
வகையாறு வாதமுதலா
யலையாமல் வாகடர்க் கசையாம லடர்மந்திர
வுத்தியினு மொழிவுரும
லூட்டணப் பெருவெள்ள மிட்டணத்தடியரிலை
யுறு மதகயத்தை நிகரா

யலையாம லேவடிவு குலையாம லேகவிமை
யாகாம லேவேதனை
யண்டாம லேவலிமை தண்டாம லேபிணிமை
யாளாம லேகாதர
மிலையாகு மாறுவகைசாத்திய வசாத்தியத்
தெய்து மவையாவு முண்மை
யிங்குலிக பற்பத் தினுங்கலவைமையினு
வினமான வனுபானமே”

என்று மாபுராண ஆசிரிய விருத்தத்திலும்,

“மெய்யப்பா மலையாளர் மெய்க்குள்ளாறு
வெப்பனலாங் குன்மமகா விரணமாறு
மெய்யப்பா லெனவாகியரங்கை செய்யு
மிப்படி யிவிப்படியாம் வகையே தென்றாற்
செய்யப்பா விங்குலிக பற்பத் தாலே
செம்மையுண்டா மிதையறியார் திருட்டு மாந்தர்
பொய்யப்பா வவர்நடத்தை யறியொணாது
புன்மையெல்லா மாறியப்பா னன்மையாமே”

என்று போகர் மூவாயிரத்தில் புகன்றிருப்பதினாலும் அறிக.

பற்பம் (வேறு)

செய்யதொரு சாதிலிங்கக் கட்டி வாங்கிச்
சிவமூலி வேர்ப்பட்டை யரைத்துக் கூட்டி
வெய்யதொரு குகைதனிலே வைத்து மூடி
விதமாகச் சந்து வாய்ச்சீலை செய்து
துய்யவே குக்குடத்தில் நீறிப் போகும்
சுகமாக நிறுத்துப்பார் எடை போகாது
உய்யவே நோயெல்லாந் தீர வென்றால்
உறப்பாக வனுபான மொன்று கேளே.

ஒன்றுதான் தேனிற்கொள்ள உறுதியாம் குன்மவாயு
பண்டுள சந்நிவாதம் பாரிசவாயு சூலை
வென்றிடு மிருமலீளை யிளைப்புடன் விரைந்துபோகும்
நன்றது சுரமும்தீரும் பவங்களு நாடாதோடும்
முன்றிடு மனுபானங்கள் கண்டுகொள் ளுகந்திடாயே.

குறிப்பு:—பற்பமென்பது ஈண்டு மெலிதலைக்குறிக்கும்; வெளுத்தலன்று. மருந்து கொடுக்க ஆரம்பிக்கும்முன் மலத்தைக் கழிக்க வேண்டும்.

பத்தியம்:—பாலும் சோறும். காரசாரம் கூடாது.

அளவு:—1 அரிசியெடை வீதம் மூன்று முதல் ஐந்து நாள் வரை கொடுக்கவும்.

வேறு

எட்டிக்கொட்டையைக் கரிசாலைச் சாற்றில் ஊறவைத்து அரைத்து இலிங்கக் கட்டிக்குக் கவசித்துச் சீலைசெய்து லகுபுடமிட்டெடுக்கவும்.

இலிங்க செந்தூரம்.

சுத்தித்த இலிங்கம் ஒரு பலத்திற்கு 1 படி ஆற்றுத்தும்மட்டிச் சமூலச்சாறு சுருக்குக் கொடுத்து, கழுவிப் பொடித்துக்கொள்ளவும்.

பற்பம்

அளவு:—அரிசியெடை.

துணைமருந்து:—தேன்.

தீரும் நோய்கள்:—குளிர்சுரம், வாதகபப்பிணிகள், மேக நோய்கள் முதலியனவாம்.

வேறு

சுத்தித்த இலிங்கம் ஒரு பலத்திற்கு 1 படி வெள்ளைப்பூண்டுச் சாறு, 1 படி வெள்வேளை வேர்ப்பட்டைச் சாறு இவ்விரண்டையும் தனித்தனியாகச் சுறுக்குக் கொடுத்து, கழுவி பொடித்துக் கொள்ளவும். இதனை மேலேகண்டவாறு உபயோகிக்கவும்.

இலிங்கக்கட்டு.

ஒரு கட்டி இலிங்கத்தை முலைப்பாலில் ஊறப்போட்டுப் பத்தாநாள் கழுவிப் பின்பு வெய்யிலில் உலர்த்தி, இலிங்கத்தின் எடைக்கு எடை கற்பூரமும், பளிங்குச் சாம்பிராணியும் எடுத்துக் கல்வத்திலிட்டு மெழுகாம்படி அரைத்துச் சூடாக வழித்து, பத்துப் பங்காக்கி ஒரு பங்கைச் சீலையிலூட்டி இலிங்கத்தை உருட்டி விளக்கில் கொளுத்தவும், ஆறியபின் எடுத்துக் கரியைச் சுறண்டிப் பிறகு மற்றைய (ஒன்பது) பாகங்களையும் தனித்தனியாக முன்போலவே செய்து எடுக்கக் கட்டும்.

இக்கட்டைத் தேனில் கொடுக்க வாயுவும்; திரிகடுகில், சந்நிதோடம், பொல்லாத மாரடைப்பு, வாயு, மூர்ச்சை; பேதி, வயிறூதலும்; இஞ்சிச் சாற்றில் சூலை, பித்தபாண்டு, விடபாகம், வயிற்று வலி, சோகையும், கொடிவேலிக் குடிநீரில் மற்றைய பிணிகளும் நீங்குமென்க.

சண்டரசபற்பர்.

இலிங்கத்திற்குச் சங்கத்திராவகம் விட்டு அரைத்து, பதங்கக் கருவியிலிட்டு முறைப்படி எரிக்கவும் இலிங்கம் கீழ்ச்சட்டியிலும், மேற்சட்டியிலும் படிந்திருக்கும், அதைச் சேகரித்து முன்போலவே சங்கத்திராவகம் விட்டரைத்து மேலும் நான்குமுறை செய்யக் கீழ்ச் சட்டியில் இலிங்கம் நீறுகிவிடும். இதனை நல்ல வெல்லத்தில் பணவெடை கொடுக்க, பேதி, ஊழி, சோகை, காமாலை, பாண்டு, பெரு

வயிறு, எண் வகைக்குன்மம், உதர வாயு, நாபியைப்பற்றிய சூலைகள், நீர் அடைப்பு, மலக்கட்டு, கிரகணி, மூலம், நாட்பட்ட சுரம், நடுக்கல், மேகவாயு, வாதசந்நி, கிரந்தி, கை கால் முடக்கல், அண்ட வாயு, மூலவாயு முதலிய பிணிகள் நீங்குமென்ப.

படிக இலிங்க செந்தூரம்.

இலிங்கம் பலம் 1, படிகாரம் பலம் 8, படிகாரத்தைத் தூள் செய்து குடுவையிலிட்டு அதற்குள் லிங்கத்தை வைத்துச் சீலைசெய்து லகுபுடமிட்டெடுக்கவும்.

அளவு:—3 முதல் 5 குன்றிவரை, நெய் அல்லது வெண்ணெயில் கொடுக்கச் சீதபேதி, இரத்தபேதி, பெரும்பாடு, ஊழி, சுரத்துடன்கூடிய பேதி முதலியன நீங்கும்.

சாதி சம்பீரக் குழம்பு.

பாசனத்தி லேயிரண்டு பாத வாலு கம்மதைத்
தேச வன்மு னீரதாக்கு தெள்ளு நாத மாம்பிரம்
வாச நன்மெய்ச் சம்பமாது வண்ண நீர்பெய் பக்குவமாய்ப்
பேச கீர்சேர் பதமதாக்கு பெரிய சாதி குழம்பிதே.

வேந்தர் வானர் முதலினர்க்கு விள்ளு மிக்கு ழம்புசேய்
மாந்த பேதி வெப்பு மூர்ச்சை வமன பித்த தாகமும்
சாந்த விந்து தேக வெண்மை சற்று மங்கி யின்மையும்
பாந்தள் வாயின் தேரை யென்னப் பாறுமிளகு கொண்மினே.

(பொ-ரை ஒரு சட்டியில் 2½ வராகனெடை கர்ப்பூரத்தைப் பொடித்துப் போட்டு அடுப்பிலேற்றி, 1 பலம் இலிங்கத்தைத் தூள் செய்து 15 பலம் எலுமிச்சம்பழச் சாற்றில் கலந்து வைத்துக் கொண்டு மேற்படி கர்ப்பூரத்துக்குச் சுருக்குக் கொடுத்துக் குழம்பு பக்குவத்தில் எடுத்துக்கொள்ளவும்.

குறிப்பு:—1. கர்பபூரத்திற்குப் பதில் பச்சைக் கர்ப்பூரத்தையும் உபயோகிப்பதுண்டு. 2. இதன் உபயோகத்தை இரண்டாவது செய்யுளில் கண்டுகொள்க.

மேகப்புண்ணுக்கு இலிங்க ஆட்சி.

இலிங்கத்தை முறைப்படி முசுமுசுக்கை, உத்தாமணிச் சாறுகளால் சுருக்குக் கொடுத்துச் சுத்திசெய்து தக்க துணைமருந்தில் உள்ளுக்குக் கொடுத்து, வெண்ணெயுடன் சேர்த்தரைத்து மேகப் புண், குட்டம் முதலியவைகளுக்கு மேற்பூசி, சிகைக்காய் நீரினால் கழுவிவர நீங்கும். இதை,

"இங்குலிக மானே இலிங்கமாம் வாறு
இரத்மும் ரசமுமே யேகமே யிவை
இரணப்புண் குட்டந் தீருந் திறத்தே"

என்று தேரர் கரிசலில் புகன்றிருப்பதால் உணர்க.

இலிங்கப் புகை.

சுத்தித்த இலிங்கம் பங்கு 1, உலர்த்தின வெண்ணொச்சியிலை பங்கு 4 எடுத்து இரண்டையும் நன்றாய்த் தூள்செய்து சீலையில் திரி செய்து புகை குடிக்கலாம். குழிப்புண், அழகுரணம் முதலியவை களுக்குப் புகை பிடித்தால் நீங்கும்.

இலிங்கத்திலிருந்து இரச மெடுக்கும் விதம்.

சித்திர மூலவேர்ப்பட்டை 4 பங்கு எடுத்து, இடித்து, இலிங்கத் தூள் 1 பங்கு சேர்த்துப் பதங்கக் கருவியிலிட்டு முறைப்படி எரிக்க இரசம் மேற்சட்டியில் ஒட்டிக்கொள்ளும், சாக்கிரதையாகப் பிரித்து எடுத்து மையிர்க் குச்சியினால் சேகரித்துக் கொள்ளவும். இதற்கு இலிங்க ரசம் என்று பெயர்.

வேறு

முன்னளவுப்படியே மஞ்சள் தூளில் இலிங்கத்தூளைக் கலந்து வர்த்திபோல் சீலையிலிட்டுத் திரித்து ஒரு அகலில் சுற்றிவைத்துக் கொளுத்திக், கீழிருந்து காற்றுப் புகுவதற்காக இடம்விட்டு ஒரு பெரிய சாலை அகலின்மேல் கவிழ்க்கவும். ஆறியபின் எடுக்க இரசம் மேல் சட்டியில் படிந்து இருக்கும் சுரண்டிக் கொள்ளவும்.

இலிங்க நஞ்சுக் குறிகுணம்.

வாயடி, உண்ணாக்கு, குரல்வளை, பெருங்குடல் முதலியன வெந்து பசும் புண்ணாகிப் பருத்திப்பூவை வெய்யிலில் கசக்கி இட்டால் போலிருக்கும். வாயில் காரம் படமுடியாது. உணவு, நீர் முதலியன அருந்துவதற்கும், பேசுவதற்கும் வருத்தத்தைக் கொடுக்கும். வாயில் கெட்ட நாற்றம் வீசிச், சுவைகெட்டு வயிற்றில் எரிச்சலையும் உண்டு பண்ணும். உமிழ்நீர் கெட்ட பனங்கள்ளைப் போலவும், காடித்தண்ணீரைப் போலவும் வெண்மையாகவும், குழம்பாகவும் காணப்படும்.

முரிவு.

சாதிக்காய், வால்மிளகு, செம்பருத்தி வேர்ப்பட்டை, கற்கண்டு இவைகளைத் தனித்தனி ஒவ்வொரு வராகனெடை எடுத்து முறைப்படி குடிநீரிட்டு இருவேளை வீதம் ஒரு மண்டலம் அருந்திவர வேண்டுமென்ப.

அநுபவ முறைகள்

(க. ராதாகிருஷ்ணன், எ.பி.)

இலிங்க மாத்திரை

சுத்திசெய்த இலிங்கம் பலம் 1, பெருங்காயம் பலம் 1, இவை யிரண்டையும் கல்வத்திலிட்டு, 2 பலம் தோலுரித்த வெள்ளைப் பூண்டைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு, நன்கு அரைத்து மெழுகு பதத்தில் பயறு, உளுந்து பிரமாணம் மாத்திரைகளாகத் திரட்டி நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்துக. இதில் வயதிற்குத் தக்க வாறு வேளைக்கு 1 அல்லது 2 மாத்திரை வீதம் தினம் 2 அல்லது 3 வேளை நோயின் வன்மைக்குத் தக்கவாறு தேன் அல்லது இஞ்சிச் சாற்றில் கொடுத்துவர, சுரம், தலைவலி, கைகால் குடைச்சல், மார்பு வலி, சுவாசகாசம், மூர்ச்சை, அஜீரணபேதி, முதலியவைகள் குண மாகும்.

கசகசா லேகியம்

கசகசா பலம் 1, மாசிக்காய் ஒன்று, ஜாதிக்காய் ஒன்று, 20 புளியங்கொட்டையின் மேற்றோல், சுட்டெடுத்த கடுக்காய்ப்பூ வராக னெடை 1, பனங்கற்கண்டு பலம் 2½.

இவைகளில் கற்கண்டு நீங்கலாக மற்ற சரக்குகளைச் சிறிது நீர் விட்டு அரைத்துக் கற்கமாகச் செய்து வைத்துக்கொள்க. பிறகு பனங்கற்கண்டை 2 ஆழாக்கு நீர்விட்டுக் கரைத்து வடிகட்டி அடுப்பி லேற்றிச் சிறுதீயாக எரித்துப் பாகுபதம் வரும்போது மேற்படி கற் கத்தைப் போட்டுக் கலந்து லேகியபதமாகக் கிளறிக் கீழிறக்கி நெய் கூட்டிப் பிசைந்து வைத்துக்கொண்டு வேளைக்கு 2, 3, சுண்டைக்காய் அளவு தினம் 2, 3 வேளை சாப்பிட்டு வர, பேதி, சீதபேதி, உஷ்ண பேதி, அதிசாரம், கிராணி முதலியவைகள் குணமாகும்.

தனியா சூரணம்

சீரகம், கருஞ்சீரகம், சோம்பு, அதிமதுரம், சன்ன லவங்கப் பட்டை, சதாப்பு இலை (உலர்ந்தது), வகைக்குப் பலம் ½, தனியா பலம் 3, சீனிகற்கண்டு பலம் 6.

கற்கண்டு நீங்கலாக மற்ற சரக்குகளை ஒன்று சேர்த்து இடித் துச் சூரணம் செய்து அத்துடன் கற்கண்டுத் தூளைச் சேர்த்துக் கலந்து வைத்துக்கொண்டு, வேளைக்குக் ¼ ரூபா எடை சூரணத்தைத் வாயிலிட்டுச் சிறிது நீர் அல்லது பால்விட்டு அருந்தவும். இப்படித் தினம் 2 வேளை வீதம் சிலநாள் சாப்பிட்டுவரப் பசி மந்தம், அசி ரணம், கபக்கட்டு, உஷ்ண இருமல், தேக எரிச்சல், பித்த மயக்கம், காமாலை, உடல் காங்கை, நித்திரையின்மை, இந்திரிய நஷ்டம் முதலி யன தீரும்.

பெரும்பாடு

கோ. துரைராசன்.

இந்நோய் பெண்களுக்கே உரியது. இதனைப் பிரதரரோகம், சிராவகம், அசிர்க்கரம் எனவும் கூறுவதுண்டு, 'பெரும்பாடு' எனும் சொல் பெருமை + படுதல் எனவிரியும். 'ஈறுபோதல்' என்னும் விதியால் நிலைமொழியின் ஈறுகெட்டு, 'பெரு' என்றும். வருமொழியின் தொழிற் பெயர் விகுதி 'தல்' கெட்டு, முதல் நீண்டு மகர ஒற்று தோன்றி 'பெரும்பாடு' என ஆயிற்று. அதிகமாகப்படுதல் எனப் பொருள்படும். இங்கு பெண்களுக்கு இயற்கையாகப்படும் சூதகம் அதிகமாக வெளிப்படுதலைக் குறிக்கும். இயற்கையாகப் படவேண்டிய சூதகத்தின் அளவை வரையறுத்துச் சொல்ல இயலாது. இது சுமார் நான்கு அவுன்ஸ் முதல் ஆறு அவுன்ஸ் என்றுதான் சொல்ல முடியும். அவ்வவர்களின் பிரக்ருதியைப் பொருத்து, இதன் அளவு குறைந்தும் மிகுதியாயு மிருக்கும். ஆகையால் அவ்வவர்களுக்கு இயற்கையாகப் படும் அளவுக்கு மீறிப்படினும், ஐந்து நாட்களுக்கு மேற்கொண்டு படினும், சூதககாலமன்றி வேறு காலங்களில் அதிகமாகப் படினும் பெரும்பாடு எனக்கொள்ளலாம். சூதகத்தில் சில கோளங்களில் சுரக்கும் நீர்களும், சூதக இரத்தமும் கலந்திருப்பதால், அந்நீர்கள் அதிகப்படுவதாலும் அல்லது அவ்விரத்தம் அதிகப் படுவதாலும், அல்லது அவ்விரண்டும் அதிகப்படுவதாலும் சூதகம் அதிகப்படலாம் மருத்துவத்தின் பொருட்டு, உடல் வன்மையைக் கெடுக்கக்கூடிய அளவுக்கும், அதற்கு மேற்கொண்டும் படும் சூதகப் பெருக்கையே பெரும்பாடு எனக்கொள்ளல் வேண்டும் இது நீர் வடிவமாவாவது, அல்லது இரத்தம் உறைந்து உண்டான சிறு, பெருங்கட்டிகள் கலந்தாவது இருக்கும்.

காரணங்கள் :—

கருதியே கணவனை கொடுமை செய்து
　கணவனையே நிந்தனை தான் சொன்ன பேரும்
பருதியின்முன் மலசலத்தை விட்ட பேரும்
　பரதேசி ஏழைகளைப் பழிக்கின் றோர்க்கும்
குருதியே பிறைக்கின்ற காலந் தன்னில்
　கூசாமற் புருஷசங்கை பண்ணி னோர்க்கும்
சுருதியே பரபோகம் விரும்பி னோர்க்கும்
　சுருக்கிலே பெரும்பாடுற் பவிக்குந் தானே.

தானென்ற காரணங்கள் மிகுக்கை யாலும்
சண்டாள கோபத்தின் சலிப்பி னாலும்
ஊனென்ற மாமிசங்கள் பொசித்த லாலும்
உறக்கமின்றி விழித்தலா லூழின் தீயால்
பானென்ற பசியின்றிப் புசிக்கை யாலும்
பாரமாஞ் சுமைதாங்கல் பகலு றக்கம்
கூனென்ற குறுக்கலாய் முடக்கித் தூங்கல்
குரூரமாம் பெரும்பாடு கூடுந் தானே.

பிறசையோகத்தை அதிகம் விரும்புதல், மிகுசையோகஞ்செய்தல், காரம், உஷ்ணமுள்ள பொருள்களை உண்ணுதல், உணவை அதிக சூடாகவோ அல்லது குளிர்ச்சியாகவோ கொள்ளுதல், நீர்க்கூறு பொருள்கள், திராக்ஷமது இவைகளை அருந்துதல், எளிதில் செரியாத கனமுள்ள உணவுகள், மாமிசம் முதலியவைகளை யதிகமாக உபயோகித்தல், பசியில்லாத காலங்களிலும், அகாலங்களிலும் உண்ணுதல், பட்டினியிருத்தல், முடக்கிக்கொண்டு படுத்தல், இரவில் தூங்காது விழித்திருத்தல், பகல் உறக்கம் கொள்ளல், அதிக தேக பயிற்சி செய்தல், பெருஞ்சுமை தாங்கி வெகுநேரம் இருத்தல், மலம், நீர் முதலிய வேகங்களை யடக்குதல், மிகு கோபங்கொள்ளுதல், துக்கப்படுதல் முதலிய காரியங்களை அடிக்கடி செய்தலாலும், ருதுகாலத்தில் செய்வதாலும், ஊழ்வினையாலும் பெரும்பாடு வரும் எனப் பழைய நூல்கள் கூறுகின்றன.

இச்செயல்கள் பெரும்பான்மை பித்தமும், சிறுபான்மை வாதகபங்களும் மீறிப் பெரும்பாடு உண்டாகிறது. இதனை நாடியின் கீழ்க்கூறப்படும் மேற்கோள்களால் அறியவும். "மேகத்தால பித்தம் மீறும்" என அகத்தியர் பாண்டவைப்பு 600 கூறுவதால், மேகத்தாலும் இந்நோய் வருமென உணரக்கிடக்கிறது.

நோய் உற்பத்தி:—

இச்செய்கைகளினால் முத்தோடங்களும் அதிகரிக்கும். அதனால் சூதகத்தோற்றத்திற்குக் காரணமாயுள்ள கருவிகள் கெடுதியடைய, ருதுகாலங்கடப்பும். அல்குலுக்குள் இருக்கும் துவாரம் சுருங்கி மூடிக்கொள்ளும். இதனால் முன்பு நாளங்களின் மார்க்கமாகச் சிரவித்துச் சேர்ந்திருக்கும் உதிரத்திற்கு வாயுவானது கரிய நிறத்தையும், துர்க்கந்தத்தையும் கொடுத்து மறு ருதுகாலத்தில் அல்லது அகாலத்தில் அல்குல் மார்க்கமாக உபத்திரவத்துடன் அதனை வெளிப்படுத்தும் என்று ஜீவரக்ஷாமிர்தம் கூறுகிறது. இது பெரும்பாலும் வாதப்பெரும்பாட்டின் உற்பத்தியாகக் காணப்படுகிறது. மற்றும் அல்குல் மார்க்கமன்றி வாயினாலும் இரத்தம் விழுமெனக் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் விழுவதற்கு முன்பு அதிக வயிற்றுவலி தோன்றும், இரத்தம் வெளிப்பட்ட பிறகு அவ்வலி சாந்தப்படும்.

நிற்க, இந்நோய்களுக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் துணை மருந்துகள் பெரும்பாலும் துவர்ப்பாயும், வீரியத்தையும், வன்மையையும் கொடுக்கக்கூடியதாயும் இருக்கின்றன. சூதக இரத்த நாளங்கள், தந்துகிகள் (மென்மையான இரத்த நாளங்கள்) இவைகளை நன்றாகச் சுருங்கச் செய்யவும், கருப்பையின் பேசி (தசை) இழைகளின் தளர்ச்சியை நீக்கி வன்மையை ஊட்டவுந்தான் அச்செய்கைகளுள்ள பொருள்கள் வழங்கப்படுகின்றன எனச் சொல்லாமலே விளங்கும். ஆகையால் அவ்விரத்தக் குழல்களின் சுருங்கும் தன்மைக் குறைவினாலும், கருப்பை அமைப்பிலுள்ள பேசிகளின் தளர்ச்சியினாலும், அல்லது அவற்றின் மிருது தன்மை நீங்கி, சுருங்க இயலாததினாலும் இந்நோய் தோன்றுகிறதென ஊகிக்கலாம். கிழத்தன்மையினாலும், கருப்பையில் மாசு பற்றுவதினாலும், கழலைகள், கிரந்திகள் முதலியன தோன்றுவதினாலும் அம்மாறுதல்கள் ஏற்பட்டு இந்நோய் வரக்கூடும். உற்பத்தியின் விபரங்களை மேனாட்டு நூல்களில் காணலாம். ஆனால், *இதுகாறும் திடமாக ஒன்றும் சொல்ல இயலவில்லை என்று அங்கு கூறப்பட்டிருப்பதால் அவைகளை நாம் இங்கு கூறாது விட்டனம்.

நாடி :—

"கூறான பித்தமீறில் ரோகியாவான்
குறும்பரே பெண்களுக்குப் பெரும்பாடாமே"

என அகத்தியர் பாண்டவைப்பு 600-ல் 310-ம் செய்யுளும்,

---

* Turning to the largé groups of "functional" uterine hæmorrhages, in which the excessive flow is presumably a manifestation of endocrine imbalance, it is admitted that our knowledge is in a transitional stage"

Diseases of Women by Ten Teachers. Seventh Edition 1942.

While discussing the causes of, Menostaxis (prolonged menstrual hæmorrhage), EDEN in his book on GYNÆCOLOGY for students and Practioners says :—

"A few instances occur, however, where no pathological lesions of any kind are demonstrable in the uterus by ordinary clinical investigation or the examination of curettings. It is difficult to understand the factors which underlie the clinical symptoms in such cases, and in the present state of our knowledge they must be referred to abnormal function on the part of the accessory sexual glands, viz. the ovary and pituitary."

"உறதியுள்ள பித்தமது தோன்றில்..............
சிறிது பெரும்பாடு ரத்த பிரமேகம்
சேர்ந்து வெகு பிணிபலவுஞ் சிறக்குந்தானே"

என வைத்திய சதகநாடி 51-வது செய்யுளும் கூறுகிறது. ஆகையால் பித்தம் மீறுவதால் பெரும்பாடு உண்டாகிறதென உணருகிறோம். ஆனால் திருமூலர் தம் நாடி 69-வது செய்யுளில்,

"ஐயமும் பித்தமு மணைந்திடுங் காலத்தில்
சொய்யுற மீரத்தங் கொப்புளிக்குந் தண்டில்
மையுறு கண்ணுட்கு மகத்தாம் பெரும்பாடாம்
வையுறும் மேக வரிசை முறைகேளே"

எனக் கூறியிருப்பதால் கபபித்த தொந்திப்பாலும் (சம அளவாக விருப்பதால்) பெரும்பாடு உண்டாகும் எனத்தெரிகிறது. அகத்தியர் காவிய நாடி 58-ம் செய்யுளிலும் இக்கருத்தையே காணலாம்.

"விடங்கிய ஐயம்கேள் மேலிரைப் பேற்றிடும்
தடங்கி இருமிடும் தனிவிலா விரண்டும்நோம்
அடங்கிச் சுரப்காயும் அளவற்ற கோழைநீர்
இடங்கி யுடல்வற்றி இரத்தமும் சக்குமே"

எனக் கூறப்பட்டுள்ளதால் ஐயம் அதிகப்படுதலாலும் இரத்தம் வெளிப்படுமென அறியப்படுகிறது.

'சிறிது பெரும்பாடு' எனச் சதகநாடியிலும், 'மகத்தான பெரும்பாடு' என திருமூலர் நாடியிலும் இருப்பதைக் கவனித்தல் வேண்டும். இதுவே இவ்விரண்டிற்கும் உள்ள முக்கிய வேற்றுமை. மற்ற வேற்றுமைகளைப் பின் கூறப்படும் அவ்வவ்வகைகளின் குணங்களில் காண்க.

வகைகள் :—

பெரும்பாடு நோய் நான்கு வகைப்படும். அவை வாத பெரும்பாடு, பித்த பெரும்பாடு, கப பெரும்பாடு, தொந்த பெரும்பாடு என்பவைகளாம்.

வாத பெரும்பாடு :—

கூடுமே தலைவலியும் மேற்கடுப்பும்
கூறான முதுகிடுப்புக் குடைச்ச லுண்டாம்
வாடுமே தேகமெல்லாங் கருக லாகும்
பாதவிடாய் தரித்துமே மைந்தன் போலாம்
ஊடுமே வயிறூதி உடைச்ச லாகி
ஊற்றுமே செந்நிறமுங் கருக லாகும்
தேடுமே துர்க்கந்தஞ் சேர வொட்டா
செகமறிய வாதத்தின் சிராவ மாமே.